[1970 மார்ச் 23

மதுரை மாவட்டத்திற்குப் புதிய தீயணைப்பு நிலையங்கள்.

40. வினா.—**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப் பாரா—

மதுரை மாவட்டத்தில் மேலும் எந்தெந்த இடங்களில் தீயணைக்கும் நிலையம் ஏற்படுத்த அரசு உத்தேசித்துள்ளது?

மதுரை மாவட்டத்தில் கீழ்க்கண்ட இடங்களில் தீயணைக்கும் நிலையம் ஏற்படுத்த அரசு உத்தேசித்துள்ளது :—

1. உத்தமபாளையம்.
2. நத்தம்.
3. கொடைக்கானல்.
4. கம்பம்.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிப்பார்க்கப் பட்டது என்பதை குறிக்கும்.]

(3) அறிவிப்புகள்.

(அ) ஓர் அவையுரிமைக் கேள்வியையும் ஓர் ஒத்திவைப்புத் தீர் மானத்தையும் மறுநாள் எடுத்துக்கொள்வது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சித்தன் அவர்கள் ஒரு உரிமைப் பிரச்சினையை எழுப்பியிருக்கிறார்கள். திரு. மார்டின் அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக் கிறார்கள். நம்முடைய மாண்புமிகு அவை முன்னவரும், மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும் இன்று இங்கு இல்லாத காரணத்தினால், இவற்றை நாளைக்கு எடுத்துக் கொள்கிறேன்.

பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

(2) நடைமுறைக் கேள்விகள்.

(ஆ) கோவையில் நடந்த மின்சாரக் கட்டண உயர்வு கிளர்ச்சி சம்பந்தமாக முதலமைச்சர் அளித்த விளக்கம் குறித்து.

திரு. பி. வேலுசாமி: ஆன் எ பாயின்டு ஆப் ஆர்டர், கோவையில் சென்ற 18-ம் தேதி நடந்த மின்சாரக் கட்டண கிளர்ச்சி சம்பந்தமாக இங்கே ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் வந்தது. அந்த ஒத்திவைப்புத் தீர்மானம் பற்றிய விவாதத்தில் முதல் அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கம் தந்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது பாயிண்டு ஆப் ஆர்டர் இல்லை. பாயிண்டு ஆப் ஆர்டர் ஏதாவது இருந்தால் சொல்லுங்கள்.

திரு. பி. வேலுசாமி: அதற்குப் பின்னல் ஒரு அறிக்கை வந்தது. அந்த அறிக்கையில் மாறான செய்தி வெளிவந்திருக்கிறது. சரியான செய்தியை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பாயிண்டு ஆப் ஆர்டர் அல்ல. முதல் அமைச்சர் அவர்கள் வந்திருக்கும்பொழுது விளக்கம் கேளுங்கள். அப்பொழுது அதற்குப் பதில் சொல்ல முடியும். இது பாயிண்டு ஆப் ஆர்டரின் கிழ் வராது.

திரு. பி. வேலுசாமி: அந்த செய்தியோடு சம்பந்தப்பட்டவன் நான். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பாயிண்டு ஆப் ஆர்டர் இல்லை. மாண்புமிகு முதல் அமைச்சர் இப்பொழுது இங்கில்லை. நீங்கள் விளக்கம் கேட்கிறீர்கள். விளக்கம் பெறுவதற்கு முதல் அமைச்சர் இருக்கும்பொழுது கேட்டுக்கொள்ளுங்கள்.

(3) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) சட்டப் பேரவை மண்டபத்தில் கட்சிவாரியாக ஒதுக்கப்பட்ட இருக்கைகள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ் நாடு சட்டப் பேரவை மண்டபத்தில், கீழே குறிப்பிடும் இருக்கைகள் கட்சிவாரியாக ஒதுக்கியிருக்கிறேன் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

காங்கிரஸ் (ஆர்கனைசேஷன்) கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்ட இருக்கை எண்கள்: 185, 186, 187; 191; 192; 193; 199; 200; 201; 207; 208; 215; 216; 223; 224; 225; 231; 232; 239; 240; 242; 243; 244; 245-லிருந்து 260 வரை.

சுதந்திராக் கட்சி உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் இருக்கையின் எண்கள்: 188, 189, 195, 196, 203; 204; 210; 211; 21; 218, 219, 226, 227.

கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சி உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்ருக்கும் இருக்கையின் எண்கள்: 190, 190-அ; 197; 198; 205; 206; 214, 222, 230, 238.